## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை

**அசல் வழக்கு எண். 49/2024**

2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 19ம் நாள் வெள்ளிக் கிழமை வாதிகள் தரப்பு சாட்சியாகிய PW1 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியில் 9வது பிரிவின் படி) பெஞ்ச்கிளார்க் கிரேடு 3 செல்வி.S.கௌசல்யா என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர் :** | **பெருமாள்** | **தொழில் :** | ஓய்வு பெற்றவர் |
| **தந்தை பெயர் :** | **வடிவேலு** | **சமயம் :** | – |
| **ஊர் :** | மகாராஜசமுத்திரம் | **வயது** | 65 |
| **தாலுக்கா :** | பட்டுக்கோட்டை | **சாதி:** | – |

**19.09.2025**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் 1ம் வாதி ஆவேன். 2,3 வாதிகள் என் சகோதரிகள், 4ம்வாதி என் தாயார், 5 முதல் 7 வாதிகள் என் சகோதரர் பழனியாண்டியின் வாரிசுகள். நான் எனது முதன்மை சாட்சியத்தை மற்ற வாதிகளுக்கு சார்பாகவும் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு ஆவணங்களாக கடந்த 25.04.1972 ல் என் அப்பா வடிவேலுவிற்கு மல்லீஸ்வரி எழுதிகொடுத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல்(அசல் ஆவணம் தொலைந்துவிட்டது) **வா.சா.ஆ.1** ஆக குறியிடுகிறேன். 09.06.1972 ல் என் அப்பா வடிவேலுவிற்கு முத்துலெட்சுமி எழுதிகொடுத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல்(அசல் ஆவணம் தொலைந்துவிட்டது) **வா.சா.ஆ.2** ஆக குறியிடுகிறேன்.கடந்த 04.02.2024 ல் என் தந்தை பெயரிலுள்ள கணினி சிட்டா **வா.சா.ஆ.3** ஆக குறியிடுகிறேன். 12.02.2024 ல் பிரதிவாதிகளுக்கு நான் அனுப்பிய நோட்டீஸ் அலுவலக நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியிடுகிறேன். 15.02.2024

ல் 1ம் பிரதிவாதிக்கு நான் அனுப்பிய நோட்டீஸை பெற்றுக்கொள்ளாமல் திரும்ப வந்ததற்கான கவர் **வா.சா.ஆ.5** ஆக குறியிடுகிறேன். 17.02.2024 ல் 2ம் பிரதிவாதிக்கு நான் அனுப்பிய நோட்டீஸை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ.6** ஆக குறியிடுகிறேன். 18.11.2008 ல் வடிவேலு வாரிசு சான்று அசல் **வா.சா.ஆ.7** ஆக குறியிடுகிறேன். பழனியாண்டி வாரிசு சான்று அசல் **வா.சா.ஆ.8** ஆக குறியிடுகிறேன். தாவாப்படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.